4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. C . ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

MCOP.No.22/ 2022 dated: 28.11.2024 ம.சா. 1 – ஆராத்தாள்

2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து நடந்த இடம் சாலையின் நேரான பகுதி என்றால் சரிதான். டிராக்டரில் இணைக்கப்பட்ட டாங்கரில் அடிப்பட்டு தான் என் கணவர் உயிர் இழந்தார் என்றால் சரியல்ல. டிராக்டரின் முன் பகுதி தான் மோதியது. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. முதல் தகவல் அறிக்கையில் டாங்கரில் மோதி தான் என் கணவர் உயிர் இழந்ததாக உள்ளது என்றும் நான் விபத்தை பார்க்காததால் நான் தவறான விபரங்கள் கூறுகிறேன் என்றால் சரியல்ல. டாங்கர் தனியாக பதிவு செய்யப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. தனியாக காப்பீடு செய்யாததால் இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்தக்கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வின்போது மேற்படி விபரம் கண்டறியப்பட்டு டாங்கர் பறிமுதல் செய்யப்பட்டது என்றால் தெரியாது. மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் அந்த விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. எங்களுக்கு விவசாய நிலம் கிடையாது. விபத்தினால் எங்களுக்கு வருமான இழப்பு எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. டாங்கர் காப்பீடு செய்யப்படாததால் இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்தக்கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

ஒம்/–C. ராஜலிங்கம் .,B.A.,B.L.,
4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.